தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 13-1-2015

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்பல்கலை உழவியல்துறைக்கு விருது

கோவை தமிழ்நாடு வேளாண்பல்கலைக்கழகம், உழவியல் துறையின் கீழ் செயல்பட்டுவரும் ஒருங்கிணைந்த பண்ணையத் திட்டத்தின் மூலம் ஈரோடு மாவட்டம் தாளவாடி வட்டம், குழியாடா மற்றும் புதுக்காடு கிராமத்தில் சுமார் 100 ஏக்கர் நிலங்களை உள்ளடக்கிய 40 குடும்பங்களைக் கொண்டு மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்கான சிறப்பு திட்டத்தினை கடந்த செப்டம்பர் 2012 முதல் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், புதுதில்லி மூலம் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மலைவாழ் மக்களின் வேளாண்மையை ஊக்குவித்து வாழ்வாதாரத்தினை நிலைப்படுத்த வேளாண் இடுபொருட்களான விதைகள், உயிர்உரங்கள், மரக்கன்றுகள், ஆடு, மாடு, கோழி, தீவனப்பொருட்கள் ஆகியன வழங்கப்பட்டன. இத்திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்பட திறன்மேம்பாடு பயிற்சி அளிக்கப்பட்டது.

பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த சிறு தானியங்களை பயன்படுத்தி மதிப்பூட்டும் உணவு பொருட்கள் செய்யும் சிறப்பு பயிற்சி கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் அளிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் அவர்களுக்கு பயன்படும் வகையில் பல்வேறு தொழில் நுட்பத் திறன் மேம்பாட்டு பயிற்சி மாதம் ஒருமுறை செயல் விளக்கத்துடன் செய்து காண்பிக்கப்பட்டது. மலைவாழ் மக்கள் திட்டத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகள் அவர்கள் வசிக்கும் இடத்திற்கு நேரடியாக சென்று கால்நடைகளுக்கு மருத்துவ உதவியும் தற்போது செய்துவருகிறார்கள். இத்திட்டத்தின் மூலம் மலைவாழ் மக்களுக்கு தேவையான பல உதவிகளை வேளாண் பல்கலைக்கழகம் செய்து வருகிறது.

அத்தகைய இத்திட்டப்பணிகளைப் பாராட்டி தமிழ்நாடு வேளாண்பல்கலைக்கழகம் உழவியல் துறையின் கீழ் செயல்பட்டுவரும் அகில இந்திய ஒருங்கிணைந்த பண்ணையத்திட்ட ஆராய்ச்சி மையத்தினை **சிறந்த மையமாக** அகில இந்திய அளவில் உத்திரப்பிரதேசம் மோதிபுரத்திலுள்ள இந்திய பண்ணையத் திட்ட ஆராய்ச்சி மையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விரிவாக்க கல்வி இயக்குநர், முனைவர். க. அ. பொன்னுசாமி அவர்கள் முன்னிலையில் டிசம்பர் 24, 2014 அன்று அகில இந்திய அளவில் நடைபெற்ற ஒருங்கிணைந்த பண்ணையத்திட்ட ஆராய்ச்சி கூட்டத்தில் கோவை மையத்திற்க்கு 2014 ஆண்டிற்கான சிறந்த மலைவாழ் மக்கள் திட்ட விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

மேலும் திட்டத்தின் மற்றொரு அங்கமான பையூர் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் செயல்பட்டு வரும் வயல்வெளி ஆய்வு மையமும் 2014 ஆண்டிற்கான பல்வேறு மையங்களுள் அகில இந்திய அளவில் சிறந்த மையமாக தேர்ந்தெடுக்கப்பட்டு கவுரவிக்கப்பட்டது. இந்த விருதுகளைப் பெற்ற விஞ்ஞானிகளை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் கு. ராமசாமி உட்பட பலரும் பாராட்டினர்.

மக்கள் தொடர்பு அலுவலர்